எழுத்தாளர் இமையம் எழுதிய

# “கலைஞரின் படைப்புலகம்” நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, டிச.18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (17.12.2024) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம் அவர்கள் எழுதிய “கலைஞரின் படைப்புலகம்” நூலினை வெளி யிட்டார்.

நூற்றாண்டு காணும் ஆளுமைகள் எனும் தலைப்பின்கீழ் புகழ்பெற்ற அரசியல் ஆளுமைகள் மற்றும் எழுத்தாளர்கள் குறித்து சிறப்பு நூல்களை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் 2022ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில் எழுத்தாளர் இமையம் அவர்களால் “கலைஞரின் படைப்புலகம்” என்ற இந்நூல் தொகுக்கப் பட்டுள்ளது.

இந்நூலானது, கலைஞர் எழுதிய நாவல்கள், சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள், பயண நூல், திரைக்கதை வசனங்கள், திரையிசை பாடல்கள், நெஞ்சுக்கு நீதி, உரைகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் தொகுப்பாகும். இந்நூலில் இந்திய அளவில் புகழ்பெற்ற 19 எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூலில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் எந்தெந்த ஆண்டு எழுதப்பட்டது என்ற விவரமும் காலவரிசைப்படி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர்

நா. முருகானந்தம் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திருமதி சோ. மதுமதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியி யல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர்

பொ.சங்கர், இணை இயக்குநர் முனைவர் தே. சங்கர சரவணன், எழுத்தாளர் இமையம், ஆலோசகர் தி. அப்பன்னசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலில்

# பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்திட கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 18-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (17.12.2024) ஆணையர் அலுவலகத்தில் பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் வகையில் செயல்படுத்தப்படும் பெருந்திட்ட வரைவு - 2 (Master Plan - Phase 2) குறித்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாக திகழும் பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு நாள் தோறும் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தருகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இத்திருக்கோயிலில் திருப்பணிகள், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்திடும் வகையில் ரூ.99.98 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வரைவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 27.01.2023 அன்று குடமுழுக்கு வெகு விமரிசையாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட பெருந்திட்ட வரைவிற்காக 58.75 ஏக்கர் நிலம் வருவாய் துறையின் மூலம் திருக்கோயில் நிர்வாகத்திற்கு ஒப்படைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் அந்த இடத்தில் பக்தர்களின் வசதிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் இரண்டாம் கட்ட பெருந்திட்ட வரைவானது செயல்படுத்தப்பட உள்ள 58.75 ஏக்கர் நிலப்பரப்பில் பக்தர்களுக்கான தங்கும் அறைகள், பொருட்கள் பாதுகாப்பு அறை, உணவகங்கள், பூங்காக்கள், முடிகாணிக்கை மண்டபம், நீரூற்றுகள், சிறுவர் பொழுதுபோக்கு பூங்கா, முருகனின் பெருமைகளை பறைசாற்றும் ஆன்மிக அருங்காட்சியகம், கலையரங்கம், வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற வசதிகளை உள்ளடக்கியதாக அமைந்திட வேண்டும். அதற்கேற்றார் போல் வடிவமைப்புகளை உருவாக்கி திட்ட மதிப்பீட்டினை விரைந்து தயாரித்து பணிகளை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, தலைமைப்பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

தினகரன் சண்முகம் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை! எம்.ரூபன் வரவேற்புரை!

# சென்னை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச. 18

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரவாயல் வடக்குப் பகுதி, 146 வது வட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் (19.12.2024 வியாழக்கிழமை) மாலை 6 மணிக்கு, ஆலப்பாக்கம், பாரதிதாசன் நகரில் நடைபெறுகிறது.

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் தினகரன் சண்முகம் தலைமை வகிக்கிறார்.

மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

146 வது வட்டக் கழகச் செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன், தீ.பாலாஜி, பி. சங்கர், பி.வாசு, எம்.சங்கர், பி.வி.சவுந்தர், வ.கண்ணன், ஏ.மணிகண்டன், எம்.அக்பர்ஷரிப், ஏ.செல்வம், டி. எஸ்.மகாதேவன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க. கணபதி, சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பி.டி.பாண்டிச்செல்வம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, தலைமை கழகப் பேச்சாளர்கள் நளினி சாரங்கன், அப்துல் கலாம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மணிகண்டன் நாடிமுத்து, கே.குமரேசன், பகுதிக் கழக நிர்வாகிகள் ஆ.மாலினி எம்.சி, ஆர்.கர்ணல், எம்.ஏ.செந்தில்சுரேஷ், எம். உதயகுமார், வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜி.மாதவன், பல. ஆலன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், எம்.இ.ஸ்டாலின் எம்.சி, ரமணி மாதவன் எம்.சி,

மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.ரசூல்தீன், ஆர்.ராக்கேஷ், எம்.சி.எழில்அரசு, கே.ராஜ்குமார், கோ.முரளி, சி.டி.ரமேஷ், கண்.பிருந்தாவணன், ஜி.குப்புசாமி, எம். ஆர்.சதீஷ், எம்.கே.ஞானசேகரன், ஜி.மூர்த்தி, வழக்கறிஞர் விஷ்ணு, ஏ.வேலு, என். செல்வராஜ், ஏ.ஜி.வேலன், கே.விவேக்குமார், எம். கே.அரிதாஸ், எம்.சி.அழகிரி, எம்.எஸ்.பிரபு, வி. வசந்த், டி.கலிம், டி.சுபாஷ், என்.மணிவண்ணன், பி. கோபிநாத், தமிழரசன், ஏ.நந்தகுமார், எஸ்.சரவணன், கு.ராஜா, ஏ.எஸ்.டி. கமலி, சுந்தரி ஆதிகேசவன், மின்னி ஜான்,

தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி மற்றும் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் டி.பாலாஜி, ஆர்.கருணாகரன், எஸ்.ஷகிலா, எஸ்.என்.ராஜ்கமல், பி.பச்சையப்பன், எஸ்.ஜானகி, எஸ்.நித்தியானந்தம், இ.பிரசாந்த், எஸ்.லாவண்யா, பி.சிவசங்கர், எஸ்.என். பாலாஜி, ஏ.தேன்மொழி, வட்டக் கழக நிர்வாகிகள் கே.தயாளன், ஜி.பழனி அரசு, தங்கம் நாராயணன், ஓ. கோபி, எம்.பிரகாஷ், வி.டி. பாபு, பி.அழகிர்சாமி, எஸ். துளசிராமன், பி.வேலாயுதம், பி.மணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எம்.நாகராஜன், கே. குபேந்திரன், இ.பிரபுதாஸ், எஸ்.சாம், எம்.பிரவீன், கே.பாண்டியன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நேற்று (17.12.2024) தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் எத்திராஜ் மகளிர் கல்லூரி இணைந்து நடத்திய கணித்தமிழ்ச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் கணித்தமிழ் மின் இதழினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் கவிஞர் முனைவர் மதன் கார்க்கி, தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் சே.ரா.காந்தி, எத்திராஜ் மகளிர் கல்லூரியின் தலைவர் முரளிதரன், முதல்வர் முனைவர் உமா கௌரி மற்றும் அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

---



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, இரண்டு நாள் சுற்றுப்பயணமாக கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்குச் செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**18/12/2024 புதன்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மதியம் 03:00 மணி | திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையம் தொடங்கி வைத்தல். | அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர். |
| மாலை 04:00 மணி | கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | பெத்தேல் மாநகர பேராலயம், சத்தியமங்கலம் சாலை, கோயம்புத்தூர். |
| மாலை 05:00 மணி | கோவை மக்களவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு. | வ.உ.சி. மைதானம், கோயம்புத்தூர் |
| மாலை 05:30 மணி | கோவை வடக்கு - தெற்கு - மாநகர் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எஸ்.என்.ஆர். கலையரங்கம், நவ இந்தியா அருகில், பீளமேடு, கோயம்புத்தூர். |

**19/12/2024 வியாழக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | பேராசிரியர் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மரியாதை செய்தல். | இரயில் நிலையம் எதிரில், திருப்பூர். |
| காலை 10:15 மணி | திருப்பூர் தெற்கு தொகுதி கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சூர்யா நகர், ஏ.பி.டி. சாலை, கருவம்பாளையம், திருப்பூர். |
| காலை 10:30 மணி | திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம். | ஆட்சியர் அலுவலகம், திருப்பூர். |
| மதியம் 01:00 மணி | திருப்பூர் வடக்கு மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | பாப்பீஸ் ஹோட்டல், திருப்பூர். |
| மாலை 06:00 மணி | கழகக் கொள்கை பரப்புக்குழு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் இல்லத் திருமண வரவேற்பு விழா. | முத்து மஹால் திருமண மண்டபம், ஈரோடு-பெருந்துறை சாலை, வேப்பம்பாளையம், ஈரோடு. |

தி.மு.க. இளைஞர் அணி

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 16-12-2024



---

மதுரையிலும் - எழும்பூரிலும் பல அடுக்கு கார் பார்க்கிங் வசதி:

# தமிழ்நாட்டின் 77 ரயில் நிலையங்களை தரம் உயர்த்த ரயில்வே நிர்வாகம் திட்டம்!

## மாநிலங்களவையில் - டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு - ரயில்வே அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச. 18-

தமிழகத்தில் உள்ள ரயில் நிலையங்களை தரம் உயர்த்தும் திட்டம் இருக்கிறதா? அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? அந்த வேலைகள் எப்போது முடியும் என்று மாநிலங்களவையில் தி.மு.க். எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.



இதற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில்:

இந்தியாவில் உள்ள ரயில் நிலையங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உட்பட அவற்றின் தரத்தை மேம்படுத்த அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தை ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, ரயில் நிலையத்திற்கு வரும் பாதை, சாலைகளை மேம்படுத்துவது,, ரயில் நிலையங்களில் வைஃபை, கழிப்பறை, ஓய்வறை வசதிகள் செய்து தருவது, பிளட்பாரங்களின் தரைப்பரப்பை செம்மைப்படுத்துவது, புதிய கட்டடங்கள் கட்டுவது ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தை அமல்படுத்த இந்தியாவில் 1337 ரயில் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் அம்பாசமுத்திரம், அரக்கோணம், அரியலூர், ஆவடி, சின்ன சேலம், சிதம்பரம், ஈரோடு, ஜோலார் பேட்டை, கோவை, காரைக்குடி, மன்னார் குடி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், தாம்பரம், எழும்பூர் உள்ளிட்ட 77 ரயில் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதில் 71 ரயில் நிலையப் பணிகளுக்கான வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை மற்றும் எழும்பூரில் ரயில் நிலையத்தில் பல அடுக்கு கார் பார்க்கிங் வசதி, ராமேஸ்வரத்தில் நுழைவு வாயில்கள் மற்றும் பார்சல் அலுவலகம் புதுப்பிப்பு, எழும்பூரில் புதிய பார்சல் அலுவலகம், பல அடுக்கு கார் பார்க்கிங், காரைக்குடியில் புதிய பயணிகள் காத்திருப்பு அறை, லிஃப்ட் வசதி, அரியலூர் மற்றும் மன்னார்குடியில் புதிய நுழைவு வாயில்கள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன.

பயணிகள் மற்றும் ரயில்களின் பாதுகாப்பை மனதில் வைத்தும் இயற்கை சீற்றங்களின் இடையூறுக்கு மத்தியிலும் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே குறிப்பிட்ட காலக்கெடு எதுவும் இந்த தொடர்பணிகளுக்கு விதிக்க முடியாது. ஆனாலும் பணிகளை விரைவுபடுத்த ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்கள் தெற்கு ரயில்வே மற்றும் தென் மேற்கு ரயில்வே மண்டலங்களின் கீழ் வருகின்றன. அம்ரித் பாரத் ஸ்டேஷன்திட்டத்திற்காக இந்த இரண்டு மண்டலங்களுக்கும் சேர்த்து கடந்த நான்கு ஆண்டுகளில் 4,313 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 2,506 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

---



தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்காவில் அமையவுள்ள தைவான் நாட்டைச் சேர்ந்த ஹோங்ஃபு (Hong Fu) நிறுவனத்தினரின் Grand Atlantia SEZ Developers Pvt. Ltd ன் Hong Fu India Project, (Non Leather Footwear Park) Chairman Mr. TY Chang, CEO, Mr. Jacky Chang, JV Partner and Director, Mr. Aqeel Panaruna, Director, Mr. Antony Chang and DirectorIndia Operation Mr. Balasubramanian ஆகியோர் சென்னை, தலைமைச் செயலகத்தில், 16.12.2024 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.நிகழ்வில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர், திருமதி. வே.அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர், திருமதி. இரா. லலிதா, உடனிருந்தனர்.